மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 82 | 14.06.2023 (புதன்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# ரணிலைக் கௌதம புத்தனும் கதிர்காமக் கந்தனும் காப்பாற்றட்டும்! மனோ கணேசன் எம்.பி!!



பக்கம் 05

## கௌதாரிமுனை காற்றாலை திட்டத்தில் தன்னிச்சையாக முடிவுகள் எடுப்பது தவறு

### அங்கஜன் எம்.பி குற்றச்சாட்டு!!



பக்கம் 05

கிளிநொச்சி கௌதாரிமுனை காற்றாலை தொடர்பான கூட்டத்தில் முன் வைக்கப்படும் கருத்துக்களை உள்ளடக்காமல் தன்னிச்சையாக முடிவுகள் எடுப்பது தவறு என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கருத்து தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி-கௌதாரிமுனை

## மாகாண சபைகளை மையப்படுத்திய இடைக்கால நிருவாக முறைமையை செயற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை : சி.வி.விக்னேஸ்வரன்



பக்கம் 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது கோரிக்கைக்கு அமைவாக மாகாண சபைகளை மையப்படுத்திய இடைக்கால நிருவாக முறைமையையே செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதனடிப்படையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்திக்கச் செல்வதோடு தமிழரசுக்கட்சியும் எமது கோரிக்கையுடன் விரைவில் இணைந்து கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஜனாதிபதிக்குள்ள மாகாண சபைகளை மையப் படுத்திய இடைக்கால பொறிமுறை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர்

## தமிழ்மக்களின் 250 ஏக்கர் காணிகள் சிங்கள மக்களால் அபகரிப்பு : சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி



பக்கம் 05

வவுனியா வீரபுரம் பகுதியில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய 250 ஏக்கர் காணி சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் போதே குறித்த குற்றச்சாட்டை அவர் முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர், “1994 ஆம் ஆண்டு செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் மக்களுக்காக 400 ஏக்கர்

## தமிழ் தேசியத்துக்கும் த.தே.ம.முன்னணிக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது:

### முன்னாள் போராளி ஆவேசம்!!



முன்னாள் போராளிகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் புரிந்துவரும் உதவிகள் தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் காண்டீபன் கூறியிருந்த கருத்து அண்மையில் பெரிய சர்ச்சையாகியிருந்தது யாவரும் அறிந்ததே.

பக்கம் 05



தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேசியம்



## ஈராக்கில் பேரழிவு இரசாயன ஆயுத பொய்யும் : போரும் !

# அமெரிக்க ஆக்கிரமிப்பால் பிணக் குவியலான ஃபலூஜா

2003இன் ஆரம்ப நாட்களில் ஈராக்கின் சதாம் அரசு பேரழிவு இரசாயன ஆயுதங் களை வைத்திருப்பதாகவும், அது மனித இனத்துக்கே ஆபத்து என்றும் அப்பட்டமான பொய்யை கூறிய அமெரிக்கா தனது புளுகு மூட்டைகளில் இருந்து பேரழிவு ஆயதங்களை அவிழ்த்துவிட்டு ஈராக்கின் இடிபாடுகள், பிணக் குவியல்கள் மேல் 'ஜனநாயகத்தை' நிலைநாட்டியது தான் மிச்சம் எனலாம். இதனையே இன்றைய ஈராக்கில் காணலாம்.

### அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த ஃபலூஜா ( Battle of Fallujah )

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஈராக் மக்களின் மிகப்பாரிய போராட்டமாக வெடித்துக் கிளம்பிய முதல் நகரம்தான் ஃபலூஜா. ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு மேற்கே 48 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இந்நகரம்.

ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா ஏப்ரல் 28, 2003ல் ஃபலூஜாவின் ஒரு பள்ளிக்கூடத்தை இராணுவ முகாமாக மாற்ற முயன்றது. இருநூறுக்கும் மேலான மக்கள் உடனடியாகக் கூடி இந்த முயற்சியை முறியடிக்கப் போராடினர். அவர்கள் மீது அமெரிக்க ராணுவம் தாறுமாறான துப்பாக்கி சூடு நடத்தி 17 பேரைக் கொலை செய்தது.

அடுத்த இரண்டாவது நாளில் இந்த படுகொலையைக் கண்டித்துப் போராடிய மக்கள் மீது மீண்டும் அமெரிக்க சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் இருவர் கொல்லப்பட்டனர்.

இச்செயல் பரந்துபட்ட ரீதியில் ஈராக்கிய மக்களின் கோபாவேசத்தை மூண்டெழச் செய்தது. ஃபலூஜா அமெரிக்க ஆக்கிரமிப்புக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தின் மையமானது.

### எண்ணை வள ஆக்கிரமிப்பு:

ஈராக்கில் கால் பதிக்காமல் எண்ணை வளப் பிராந்தியத்தில் தன் ஆதிக்கத்தையும் தனது உலக மேலாதிக்கத் திட்டத்தையும் நிறைவேற்றுவதை அமெரிக்காவால் முடியாது. நெடுந்தொலைவில் இருந்து குண்டு வீசினாலும் ஈராக்கின் எண்ணை வயல்களை இலகுவாக உறிஞ்சு கைப்பற்ற முடியாது.

> **"(இருபது வருடங்களுக்கு முன்னர் ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா ஏப்ரல் 28, 2003ல் ஃபலூஜாவின் ஒரு பள்ளிக்கூடத்தை இராணுவ முகாமாக மாற்ற முயன்றதில் இருந்து தொடங்கிய கோரமான போரே Battle of Fallujah ஆகும். ஈராக்கில் பிணக் குவியல் மேல் நாட்டப்பட்ட ஜனநாயகம். ஈராக்கில் இன்னோரு 'மைலாய்' படுகொலையே - ஃபலூஜா ஆகும்)"**

இதனாலேயே பீதியுடன் கால் பதித்த அமெரிக்க பொம்மை அரசாலும், பிரித்தாளும் சூழ்ச்சியாலும் மட்டுமல்லாமல் தான் அடைந்த அதே பீதியை மக்களுக்கு ஏற்படுத்தும் பயங்கரவாத நடவடிக்கைகளாலுமே ஊன்றிய காலை உறுதி செய்துகொள்ள முயற்சித்தது.

ஃபலூஜாவில் கொடூரமான போர்க் குற்றங்கள் பல செய்திருந்த 'ப்ளாக்வாட்டர் யூ.எஸ்.ஏ' (BlackWater USA) என்ற தனியார் கூலிப்படையின் அணி வரிசையை மார்ச் 31, 2004 அன்று வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம் ஒன்று தடுத்து நிறுத்தி அவர்களுக்கு தண்டனை வழங்கியது

பாரிய அமெரிக்க இராணுவ மேலாதிக்கத்துக்கு எதிராக ஃபலூஜா மக்கள் நடத்திய போராட்டங்களும், அடைந்த வெற்றிகளும் நாடெங்கிலும் மக்களால் கொண்டாடப்பட்டது, உலகத்தார் கவனத்தை எல்லாம் ஃபலூஜா தம் பக்கம் ஈர்த்துக் குவித்தது. அதனால் அமெரிக்க ஆக்கிரமிப்பு கேள்விக் குறியாக்கப்பட்டது.

### பெண்டகன் சுற்றி வளைத்த ஃபலூஜா:

பழிவாங்கும் முகமாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் பெண்டகன் நவம்பர், 2004ல் ஃபலூஜா நகரினை சுற்றி வளைத் தது. உள்ளிருப்போர் அனைவரும் எதிரிகள் என்று அறிவிக்கப்பட்டனர். நகரம் படுபயங் கரமான ஆயுதங்கள் தரித்த ஈவிரக்கமற்ற ஏராளமான இராணுவத்தினரின் போர்க்களம் ஆக்கப்பட்டது. தப்பி ஓட முயன்ற மக்கள் குடம்பத்துடன் மீண்டும் அந்த கொலைக் களத்தில் பிடித்துத் தள்ளப்பட்டனர்.

பேரழிவு இரசாயன ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் இறங்கிய அமெரிக்காதான் வெள்ளைப் பாஸ்பரஸ் என்ற இரசாயனப் பொருளை மிகப் பெரும் அளவில் இந்தத் தாக்குதலில் பயன்படுத்தியது.

போர்க்களத்தை ஒளியூட்டவே வழக்கமாய் பயன்படுத்தப்படும் இந்த இரசாயனம் மரணத்தை விளைவிக்கும் பயங்கரமான இரணங்களை ஏற்படுத்தக் கூடியது.

கதவுகள், சன்னல்கள் போன்ற கட்டுமானப் பொருட்கள், அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் மக்களின் உடைகள் என தன் வழிப்பட்ட தடைகள் அனைத்தையும் எரித்துக்கொண்டு முன்னேறி இறுதியில் மனிதத் தோலையும், உள்ளிருக்கும் எலும்பையும் தின்று செறிக்கும் அகோரப்பசி கொண்டது அந்த இரசாயனம்.

### அமெரிக்காவின் வெள்ளைப் பாஸ்பரஸ் தாக்குதல் :

வெள்ளைப் பாஸ்பரஸ் தாக்குதலில் மக்கள் பதுங்கி இருக்கும் பாதுகாப்பான குடியிருப்புக் கட்டிடங்களின் உள்ளிருக்கும் பிராண வாயுவையும் உறிஞ்சி எடுத்துவிடும். பயங்கர தீமைத தன்மை கொண்ட வெள்ளைப் பாஸ்பரஸ் இத் தாக்குதலில் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டது. இத்தோடு நில்லாமல் சொல்லொணாத் துயரைத் தலைமுறை தலைமுறைக்கும் விளைவிக்கும் கதிர்வீச்சுத் தன்மைகொண்ட ஏராளமான குண்டுகள் இந்த நகரத்தின் மீதான குவிந்த தாக்குதலில் பயன்படுத்தப்பட்டன என்றும் அஞ்சப்பட்டது.

அமெரிக்க இராணுவத்தால் உயிருடன் பிடித்துச் செல்லப்பட்ட மக்கள் 1300-1500 மக்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். இதையே வேறு சொற்களில், "ஆயுதப் போராளிகள்" 1400 பேர் கொல்லப்பட்டனர் என்ற தனது மேற்குலக ஊடகங்களின் அறிவிப்பின் மூலம் வெளிப்படுத்தியது அமெரிக்கா.

போர் வெறி கொண்ட இராணுவம் ஃபலூஜா மக்களைப் பழிவாங்கும் தனது நோக்கத்தை இந்த செயலின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டது. படுகாயமுற்றுப் பரிதாப நிலையில் இருந்த ஒரு ஈராக்கியரை அமெரிக்க சிப்பாய் ஒருவன் சுட்டுக் கொல்வதைப் டீஊ செய்தி படம் பிடித்திருந்தது.

தனது பாதுகாப்பு கருதி செய்யப்பட்டதே இந்த செயல் என அமெரிக்க இராணுவ விசாரணை பின்னாளில் அப்பட்டமான பொய்யை கூறியது.

### ஃபலூஜா மக்களைப் பழிவாங்கிய படலம் :

பத்து நாட்கள் நடந்த இந்த தாக்குதலில் இந்நகரத்து மக்கள் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது இன்று வரை யாருக்கும் தெரியாது. இத் தாக்குதலுக்கு முன்னதாக பல பத்தாயிரம் மக்கள், பெரும்பாலும் பெண்களும், குழந்தைகளும் நகரத்தை விட்டு வெளியேறினர். இந்த தாக்குதலுக்கு முந்திய ஃபலூஜாவின் மக்கள் தொகை 4-6 லட்சம். தற்போதைய சனத் தொகையோ வெறும் 2-3 லட்சம் மட்டுமே இருக்கும் என அஞ்சப்படுகிறது.

இத் தாக்குதலில் நகரத்தின் கட்டிடங்கள் பாதிக்கு மேல் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. ஈராக்கின் பல பகுதிகளைப் போலவே ஃபலூஜாவும் இடிபாடுகளுக்கு இடையேதான் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. தாக்குதல் முடிந்து பலஆண்டுகள் கடந்த பின்னும் இது தான் நிலை.

### ஃபலூஜாவில் தொடரும் நோய்:

ஃபலூஜாவின் புற்றுநோய் விகிதம் ஹிரோஷிமாவைக் காட்டிலும் படுமோசமாக உள்ளது.

"ஈராக்கிய நகரம் ஃபலூஜாவின் புற்றுநோய், சிசு மரணம் மற்றும் மகப்பேறில் பாலின விகிதாச்சாரம் 2005-2009" என்ற தலைப்பிலான சமீபத்திய ஆய்வு, "ஃபலூஜா நகர மக்கள் புற்றுநோய், லூக்கிமியா- இரத்தப் புற்று நோய், சிசு மரணம், பாலின மாறாட்டம் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த பாதிப்புகளின் அளவு 1945-ம் ஆண்டு ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலில் தப்பிப் பிழைத்தோரிடம் காணப்படும் அளவை விடக் கூடுதலாக இருக்கிறது என்ற உண்மையை வெளிக் கொண்டு வந்திருக்கிறது.

அமெரிக்கத் தாக்குதலுக்கு முன்பு இருந்த அளவைக் காட்டிலும் புற்றுநோய் நான்கு மடங்கு அதிகரித்து இருப்பதையும், தற்போது அங்கு காணப்படும் புற்றுநோயின் தன்மை அணுக் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு தப்பிப் பிழைத்த ஹிரோஷிமா, நாகசாகி மக்களிடம் காணப்பட்ட புற்றுநோயின் தன்மையுடன் ஒத்திருப்பதையும் அந்த ஆய்வுகள் வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்து தெரிவிக்கின்றனர்.

### ஹிரோஷிமாவைக் காட்டிலும் படுமோசமான பாதிப்பு:

ஈராக்கின் அண்டை நாடுகளான எகிப்து, ஜோர்டான், குவெய்த் ஆகியவற்றில் காணப்படுவதைப்போல இரத்தப் புற்றுநோய் [leukemia] பாதிப்பு 38 மடங்கும், சிசு மரணம் 12 மடங்கும், மார்பகப் புற்றுநோய் 10 மடங்கும் ஃபலூஜாவில் அதிகரித்து இருக்கிறது. பெரியவர்களிடையே பெரும் அளவில் மூளைப் புற்றுநோய்க் கட்டிகளும் [brain tumors], சீழ்க் கொப்பளங்களும் [Lymphoma] காணப்படுவதாக ஆய்வு அறிக்கை குறிப்பிடுகிறது.

1050 ஆண் குழந்தைகளுக்கு 1000 பெண் குழந்தைகள் என்று இருந்த விகிதம் 2005-க்குப் பின் மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டிருக்கிறது. அமெரிக்கத் தாக்குதலுக்குப் பிந்திய இந்த நான்கு ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளில் பிறப்பு விகிதம் 860 ஆண்களுக்கு 1000 பெண்கள் என்று தலைகீழாகி இருக்கிறது. இந்த பாலின விகித மாறுபாடும் 1945-ன் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலுக்குப் பிந்திய ஹிரோஷிமாவை ஒத்திருக்கிறது.

அணுவுலை எரிபொருட் கழிவு என அறியப்படும் இந்த திறன் குறைந்த யுரேனியத்தை அமெரிக்க இராணுவம் கவசங்கள், பதுங்கு குழிகளைப் பிளக்கும் குண்டுகளிலும், தோட்டாக்களிலும் பயன்படுத்துகிறது. இதன் வெடிப்பின்போது 40 சதவீதத்துக்கும் மேலான யுரேனியம் மீசிறு அணுத்துகள்களாக வெளிப்படுகிறது. இது தாக்கப்பட்ட பகுதிவாழ் மக்களின் இரத்த ஓட்டத்தில் எளிதில் புகுந்து நிணநீர் சுரப்பிகளில் தங்கிவிடுகிறது. அது வயதுவந்தோரின் விந்தணுவிலும், கருமுட்டையிலும் உருவாகும் மரபணுக் குறியீடுகளை (DNA) தாக்கி அடுத்த தலைமுறையினருக்கு பாரிய பிறவிக் கோளாறுகளை உண்டுபண்ணுகிறது.

இத்தகைய பாதிப்பால் விகாரமான பிறப்புகள், சிசு மரணம், பிறவிக் கோளாறுகள் மற்றும் புற்றுநோய்களின் எண்ணிக்கை ஃபலூஜாவில் செங்குத்தாய் உயர்ந்து நிற்பதை உறுதிப்படுத்தும் முறைப்படியான விஞ்ஞானபூர்வமான முதல் ஆய்வு இது.

சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பற்றிய சர்வதேச ஆய்வு ஏடு (IJERPH) வெளியிட்ட கொள்ளைநோய் பற்றிய ஆய்வும் அண்டை நாடுகளைக் காட்டிலும் படுமோசமான அளவில் மேற்சொன்ன பாதிப்புகள் ஃபலூஜாவில் நிலவுவதைக் கண்டறிந்து கூறியது.

பல ஈராக்கிய மற்றும் பிரிட்டிஷ் மருத்துவர்கள் இணைந்து கதிர்வீச்சு தொடர்பான நோய்களின் வெகுவான பரவல் பற்றிய ஒரு விசாரணை நடத்தக் கோரி ஐ.நா. சபைக்கு அக்டோபர், 2009ல் கீழ்க்கண்ட விவரங்களுடன் ஒரு அறிக்கை எழுதினர். தலை இன்றி முண்டமாகவும், இரு தலைகளுடனும், நெற்றியில் கண்ணுடனும், கைகால்கள் அற்ற முடமாகவும், இன்னபிறவாகவும் விகாரமாகப் பிறக்கும் ஏராளமான குழந்தைகளைக் காணச் சகியாது ஃபலூஜாவின் பெண்கள் பிள்ளைப் பேற்றை நினைத்து அரண்டு போயிருக்கிறார்கள். மேலும், சின்னஞ்சிறு குழந்தைகளும் கொடூரமான புற்று நோய்க்கும், இரத்தப் புற்று நோய்க்கும் ஆளாகி இருக்கிறார்கள் என செப்டம்பர், 2009-ல் ஃபலூஜா பொது மருத்துவமனையில் 170 குழந்தைகள் பிறந்தன. அவற்றில் 24மூ குழந்தைகள் பிறந்த ஏழு நாட்களுக்குள் இறந்துவிட்டன. அவ்வாறு இறந்த குழந்தைகளில் 75மூ குழந்தைகள் மேற்சொன்ன விகாரத்துடன் பிறந்தவை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஃபலூஜாவில் என்றும் காணாத அளவுக்குப் பிறவிக் கோளாறுகளுடன் பிரசவம் ஆவது மட்டுமல்ல, 2003-ம் ஆண்டுக்குப் பின்னால் குறைப் பிரசவங்கள் தாருமாறாக அதிகரித்து இருக்கின்றன. அதனினும் கொடுமை என்னவென்றால், உயிர்த்திருக்கும் குழந்தைகளில் கணிசமானவை படிப்படியான பாரதூரமான உடலுறுப்புக் குறைபாடுகளுக்கு ஆளாகிறன.

### பாரிய போர்க் குற்றங்கள்:

ஃபலூஜாவின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், நமது காலத்திய படுமோசமான போர்க் குற்றங்களில் ஒன்றாகும். இவ்வித நடவடிக்கை "அதிர்ச்சியூட்டும் எச்சரிகை" அல்லது "கூட்டுத் தண்டனை" என அழைகப்படுகிறது. இது சட்டப்படி ஒரு போர்க் குற்றமாகும். ஆயினும் உலகம் இன்னமும் மௌனித்தே உள்ளது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

## வடமாகாண தமிழரின் உலகளாவிய தாக்கம் : சிங்கப்பூரின் ஜனாதிபதி வேட்பாளராக

# தர்மன் சண்முகரத்தினம் : ஜீவன் தியாகராஜா



பிரித்தானியக் காலனித்துவக் காலத்தில் சிங்கப்பூர் மலேசியாவுடன் இணைந்திருந்தது. சுதந்திரமடைந்ததன் பின்னர் 1966 ஆகஸ்ட் 9ஆம் திகதி சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனிக்குடியரசாகியது. அதற்கு முன்னதாக, முதலாவது உலகப் போர் உக்கிரமாக நடைபெற்றது.

அப்போரின் பின்னரான காலத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்தவர் மலாயாவுக்குச் சென்றார். அவர் உட்பட அங்கு சென்ற நபர்கள் தமது முன்னேற்றத்துக்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் கடினமாக உழைத்தார்கள். தொழில் ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

தற்போது சிங்கப்பூர், பொருளாதார, சமூக, பல்லின கலாசார ரீதியாக முன்னேற்றகரமான நிலைமையில் உள்ளது. அந்த நாட்டின் பிரஜைகளும் உயர்ந்த வாழ்வுவாதார நிலையில் உள்ளார்கள் என்பதை கண்கூடாக அவதானிக்க முடிகின்றது.

தர்மன் சண்முகரத்தினத்தின் வரலாறும் மேற்படி நிலைமைகளை மையப்படுத்துவதாகவே உள்ளது. தமிழரான தர்மன் சண்முகரத்தினம் தற்போது சிங்கப்பூரின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவது உறுதியாகியுள்ளது. இதன்மூலமாக வடமாகாணத்தைப் பூர்வீகத்தைக் கொண்டவரின் பிறிதொரு நாட்டில் செலுத்தும் தாக்கம் வெளிப்பட்டுள்ளது.

தர்மன் சண்முகரத்தினத்தின் தாயாரின் பெற்றோர் (பாட்டனார்) ஊரெழு மற்றும் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள். அவருடைய தாத்தா வைத்தியர் விஸ்வலிங்கம். அவர் சிலோனியர்களுடன் சேர்ந்து செந்தூழ் சிவன் கோவிலை கட்டினார்.

அதேநேரம், அவர் ஒரு மருத்துவராகவும் அர்ப்பணிப்பான சேவையை முன்னெடுத்திருந்தார். இவரது தந்தை கே.சண்முகரத்தினம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவருடைய தயார் மலாயாவில் பிறந்தவர்.

பின்னர், தர்மன் சண்முகரத்தினம ஜப்பானிய-சீன வழக்கறிஞரான ஜேன் யுமிக்கோ இட்டோகி என்பவரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு மூன்று ஆண்களும் ஒரு பெண்ணுமாக நான்கு பிள்ளைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கல்வியில் முதன்மை

தர்மன் சண்முகரத்தினம் லண்டன் ஸ்கூல் ஒஃப் எக்கனொமிக்ஸில் பொருளாதாரத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றவராவர். அவர் பட்டப்படிப்புக்கு முன்னதாக, ஆங்கிலோ-சீனப் பாடசாலையில் கல்வி கற்றார்.

பின்னர் 2011இல் அவர் புலமைப்பரிசிலைப் பெற்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்துறையில் முதுகலைத் தத்துவப் பட்டம் பெற்றார், மேலும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் கெனடி அரசாங்கப்பாடசாலையில் பொது நிர்வாகத்தில் முதுகலைப்பட்டமும் பெற்றார், அங்கு அவருக்கு சிறந்த செயல்திறன் மற்றும் தலைமைத்துவத் திறனுக்காக 'லூசியஸ் என் லிட்டாவர் ஃபெலோ' விருது வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

### அரசியலில் பிரவசம்

துறைசார்ந்தவொரு பொருளாதார நிபுணரான தர்மன் சண்முகரத்தினம் ஒசிங்கப்பூருக்கான அரச சேவையில், முக்கியமாக பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளுடன் தொடர்புடைய பணிகளில் பெரும் பங்காற்றினார்.

அதனையடுத்து, சிங்கப்பூர் அரசியலுக்குள் பிரவேசித்தார். அவர் முதன்முதலில் மக்கள் செயல் கட்சி ஊடாக அரசியலில் பிரவேசித்தவர், 2001 நவம்பரில் ஜுரோங் ஜிஆர்சி தொகுதியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

மக்கள் செயல்கட்சியானது 79.75 சதவீத வாக்குகளைப் பெற்றதையடுத்து, ஆட்சி அமைத்தது. அதன்பின்னர் அவர் தொடர்ச்சியாக நான்கு முறை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர், சிங்கப்பூரின் துணைப் பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சராக பல பரினாமங்களை வகித்ததன் பின்னர் 2019 மே முதல் சிங்கப்பூர் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சராகவும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் உள்ளார்.

மேலும் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து பிரதமருக்கு ஆலோசனை வழங்குபவராகவும், சிங்கப்பூர் நாணய நிதியத்தின் தலைவராகவும் மற்றும் சிங்கப்பூர் அரசாங்க முதலீட்டுக் கழகத்தின் துணைத் தலைவராகவும், அதன் முதலீட்டு உத்திகள் குழுவின் தலைவராகவும் வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றார்.

2014 முதல் பொருளாதார மேம்பாட்டு திணைக்களத்தின் சர்வதேச ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் இருந்து வரும் அவர், 2011-2019 காலப்பகுதியில் துணைப் பிரதமராகவும், 2011-2015 பொருளாதாரமற்றும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் செயற்பட்டுள்ள அவர் 2007-2015 வரையில் ஒன்பது ஆண்டுகள நிதி அமைச்சராகவும், 2003-2008 ஐந்து ஆண்டுகள் கல்வி அமைச்சராகவும் இருந்தார்.

### பொதுச் சேவையில் பங்களிப்பு

தர்மன் சண்முகரத்தினம் கல்வி அமைச்சராக பணியாற்றிய போது, எதிர்கால சந்ததியினர் பரந்துபட்ட மற்றும் நெகிழ்வான தகுதியை அடைவதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியமை விசேட அம்சமாகும்.

குறிப்பாக, 'முனைளுவயுசுவ்', பாலர் கல்வியின் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றைக் முன்னெடுத்தமையைக் குறிப்பிடலாம். பின்னர் **'SkillsFuture'** திட்டத்தை வழிநடத்தினார், இத்திட்டமானது, சிங்கப்பூரர்களிடையே வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்த 2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

கொரோனா தொற்றுப் பரவலின்போது, சிங்கப்பூரர்களுக்கான பணிகளை ஆதரித்து மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்பார்வையிட்ட தேசிய செயற்பாடுகள் தொடர்பான சபைக்கும் தலைமைத்துவத்தினை வழங்கியிருந்தார்

முற்போக்கான ஊதியச் செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் குறைந்த ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்களின் வருமானத்தை உயர்த்துவதையும், சமூக சேவையாளர்களின் நிலைமைகளையும், சமூக சேவை அலுவலகங்களின் திறன்களை மேம்படுத்துவதையும் அவர் மேற்பார்வையிட்டிருந்தார்.

### ஏனைய வகிபாகங்கள்

தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூருக்கு வெளியே, சிங்கப்பூர், இந்திய மேம்பாட்டு சங்கத்தின் உறுப்பினர்கள் குழுவின் தலைவராகவும் உள்ளார், இது இந்திய சிங்கப்பூர் சமூகத்தில் கல்வி செயற்றிறன் மற்றும் சமூக பின்னடைவை மேம்படுத்த முயல்கிறது.

தர்மன் சண்முகரத்தினம் பல சர்வதேச சபைளுக்குகு தலைமைகு தாங்கினார், குறிப்பாக பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்களில் கவனம் செலுத்திய அவர், 2017 முதல் 2022 வரை பொது மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த பொருளாதார மற்றும் நிதித் தலைவர்களின் சுதந்திரமான உலகளாவிய சபையின் ஜி-30 முப்பது குழுவின் தலைவராக இருந்துள்ளதோடு 2011 முதல் 2014 வரை சர்வதேச நாணய மற்றும் நிதிக் குழுவின் முதல் ஆசியத் தலைவராக இருப்பதும் பதவி வகித்திருந்மையும் விசேடமானதாகும்.

இந்நிலையில் தர்மன் சண்முகரத்தினம் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் குழுவிலும், மற்றும் உலகப் பொருளாதார மன்றத்தின் அறங்காவலர் குழுவின் வெளிப்புற ஆலோசனைக் குழுவிலும் உள்ளார்.

இத்தகைய பதவி நிலைகளை வகித்து, உச்சத்துக்கே சென்றுவிட்ட அவருடைய வாழ்வியல் கதை இலங்கைக்கு வெளியே வடமாகாண தமிழர்களின் திறனைக் காண்பித்து நிற்கின்றது.

அத்துடன் அவருடைய வாழ்க்கைப் பயணமும் சாதனைகளும் தமிழர்களுக்கு ஒரு மிகச் சிறந்த பாடம். வடமாகாணத்தின் ஆளுநராக இருந்தவர் என்ற அடிப்படையிலும், நானும் கலாநிதி விஸ்வலிங்கமும் ஊரெழுவிலிருந்து மலாயாவிற்கும் மீண்டும் இலங்கைக்கும் ஆற்றிய பணியின் ஊடாக புதிய உறவுப்பாலத்தினை அமைத்தக்கொண்டேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகின்றது.






### அன்பான வாசகர்களுக்கு..!

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

# கிழக்கு மாகாண ஆளுநரை கௌரவித்த சிலோன் மீடியா போரம் !





கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அண்மையில் நியமிக்கப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மாகாண அமைச்சருமான செந்தில் தொண்டமானை சிலோன் மீடியா போரம் பொன்னாடை போத்தி நினைவுச்சின்னம் வழங்கி வாழ்த்தி கௌரவித்தது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று திங்கட்கிழமை மாலை அம்பாறை ஆளுநர் விடுதியில் இடம்பெற்றது. இதன் போதே இந்த கௌரவிப்பு நடைபெற்றதுடன் கிழக்கு ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள், தேவைகள் அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டதுடன், கிழக்கிலிருந்து வெளியாகும் பத்திரிகையின் சிறப்பு பிரதியும் வழங்கி வைக்கப்பட்டது.

இக்கௌரவிப்பு நிகழ்வில் சிலோன் மீடியா போரத்தின் தலைவரும், சாய்ந்தமருது பிரதேச செயலக சமூர்த்தி முகாமைத்துவ பணிப்பாளருமான கலாநிதி றியாத் ஏ மஜீட், சிலோன் மீடியா போரத்தின் பொருளாளரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், சிலோன் மீடியா போரத்தின் பிரதித்தலைவரும், ஆசிரியருமான எஸ். அஸ்ரப்கான், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர் பைசால் இஸ்மாயில், உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# நெளுக்குளம் பகுதியில் மாடுகள் கடத்தல்!! பொலிசார் மீது குற்றச்சாட்டு!



வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அதிகளவாக மாடுகள் கடத்திச்செல்லப்படுகின்ற சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நேற்று கலந்துரையாடப்பட்டதுடன் நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி மீதும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டது,

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் குறித்த பகுதியில் அதிகளவாக மாடுகள் கடத்திச்செல்லப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அத்துடன் நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். எனவே அவரை இடமாற்றி ஒழுக்காற்று நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு தெரிவித்திருந்தார்.

அதற்கு பதில் அழித்த மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் மாடுகள் களவாடப்பட்டுள்ளமை தொடர்பாக நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட இருவரை நீதிமன்றில் ஆயர்படுத்தியுள்ளோம்.

அத்துடன் இச்சம்பங்கள் தொடர்பாக தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மக்களுக்கு விரோதமாக செயற்பட்டிருந்தால். அது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பரிசீலிக்கலாம் என்றார்.

# வவுனியா பட்டாணிச்சூர் புளியங்குள நீரேந்து பிரதேச ஆக்கிரமிப்புக்கு நடவடிக்கை..!



வவுனியா பட்டாணிச்சூர் புளியங்குளம் பகுதியின் நீரேந்து பிரதேசம் ஒரு சிலரால் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருந்துததுடன் இதனால் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக இனமுறுகலும் ஏற்பட வாய்ப்பாக இருந்தது எனினும் பொலிஸார் தலையிட்டு இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையம் அழைத்து சென்று முறைப்பாட்டையும் பெற்றிருந்தனர்

இது தொடர்பாக நேற்றைய மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் குறித்த ஆக்கிரமிப்புக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேள்வி எழுப்பியருந்தார் பாரளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள்

இதற்கு பதில் கூறிய மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர் வரும் 18ம் திகதி நீதிமன்றிற்கு முன்னிலை படுத்த உள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்

# வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுகூட்டம்: நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள்



வவுனியா மாவட்டத்தின் இவ்வருடத்திற்கான இரண்டாவது ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் அவர்களின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (13.06) இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் கால்நடைகள் திருட்டு அது தொடர்பில் மக்களுக்கு பொலிஸார் மீதான நம்பிக்கையின்மை, வவுனியா மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள சிலைகள் வைப்பதற்கான சட்டவிரோத கட்டிடங்களை நகரசபை அகற்றுமாறு விடுத்த கோரிக்கைகள், வீரபுரம் பிரதேசத்தில் சிலர் சட்டவிரோதமாக காணிகளை அடாத்தாக கையகப்படுத்தல், கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு முன்பாக சட்டவிரோதமான முறையில் இடம்பிடித்து பணம்பெறல் மற்றும் போதைப்பொருள் விற்பனை, வவுனியா வைத்தியசாலையில் மருந்தாளர்கள் பற்றாக்குறை மற்றும் வவுனியாவில் தனியார் மருந்தகங்களில் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர்கள் இன்மை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதனபோது பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாட் பதியூதீன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், பிரதமசெயலாளர் சமன்பந்துலசேன, மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பொலிசார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# "தாகத்திற்கு நீர் போத்தல்" வழங்கி வரவேற்ற சிலோன் மீடியா போரம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "நிலையான சமாதானத்திற்காக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் கதிர்காம பாதயாத்திரை" தேசிய வேலைத்திட்டமான கதிர்காம பாதை யாத்திரை செல்லும் தமிழ், சிங்கள இளைஞர்களுக்கு இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கில் "தாகத்திற்கு நீர் போத்தல்" வழங்கி வரவேற்கும் நிகழ்வு நேற்று (13) செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது வைத்தியசாலை முன்றலில் மாளிகா சந்தியில் இடம் பெறவுள்ளது.

சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் போரத்தின் தலைவரும் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பரின் அனுசரணையில் 200 இளைஞர்களுக்கு தாக சாந்திகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட உதவிப்பணிப்பாளர் டவலியு.ஜீ.ஏ. எஸ். தமயந்தி, சாய்ந்தமருது வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர், சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம், பிரதேச செயலக நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். சமிழுள் இலாஹி, சிலோன் மீடியா போரத்தின் பொதுச்செயலாளரும், நாவிதன்வெளி பிரதேச செயலக நிதி உதவியாளருமான எம்.எஸ்.எம். முஜாஹித், சிலோன் மீடியா போரத்தின் பொருளாளரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், சிலோன் மீடியா போரத்தின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்




**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

### ரணிலைக் கௌதம புத்தனும்...

இலங்கையின் வரலாற்றில் தமிழ் பௌத்த வரலாற்றுக்கு உரிய இடத்தை ஏற்றால், அது இன்று நாம் எதிர்கொள்ளும் அநேக பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் சாவியாகும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் முதன்முறையாக நாட்டின் தலைவர் இலங்கைத் தீவின் தமிழ் பௌத்த வரலாற்றைப் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியினருடனான கலந்துரையாடலின் போது தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

அதன்போது இலங்கைத் தீவின் தமிழ் பௌத்த வரலாற்றைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு, ரணில் விக்ரமசிங்க கருத்துக் கூறியுள்ளார்.

இப்படி ஒரு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை சிங்கள தீவிரர்கள் எப்போதும் மறைக்க விரும்புகின்றார்கள்.

அந்த விஜயன் வந்து இறங்கிய கதை பொய்யென்று என்னைத் தேடி வந்து வண. பிக்கு ஞானசாரர் சொன்னது போன்றும், இளவரசன் விஜயன் வரவை நினைவு கூர்ந்து, இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டு பின்னர் அதை இரண்டு வருடங்களில் மீள பெற்றதைப் போன்றும், வெறும் கைகளால் சூரியனை மறைப்பதைப் போன்றும், வரலாற்றில் தமிழர்களுக்கு உரிய இடத்தை இவர்கள் எப்போதும் மறைக்க முயன்று வருகின்றார்கள்.

தமிழ் பௌத்த வரலாறு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இன்று நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் என்ற பூட்டுக்கு அது சாவியாக அமையும் என நான் நம்புகிறேன்.

இந்நோக்கில், 2018ஆம் ஆண்டு நான் அமைச்சராக இருந்த போது ஒரு காரியம் செய்தேன்.

பிரபல சிங்கள வரலாற்றாசிரியர், சினிமா எழுத்தாளர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றைப் பற்றி சான்றுகளுடன் எழுதிய "தமிழ் பௌத்தன்" (தமிழ பௌத்தயா) சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமல் இருந்தது.

அந்த நூலைத் தேடிப் பிடித்து, பேசி பேராசிரியரின் அனுமதியைப் பெற்று அதை எனது அமைச்சின் செலவில் மறுபிரசுரம் செய்து நாட்டின் சிங்கள பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

அதன்பின் பேராசிரியர் ஆரியரத்னவை அழைத்து சில வண. பிக்குகள் கண்டித்தார்கள் என அறிந்தேன். என்னுடன் முரண்பட எவரும் வரவில்லை.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் போட்டுக் கிழிப்பார்களோ தெரியவில்லை. அவரை அந்தக் கௌதம புத்தனும், கதிர்காமக் கந்தனும் காப்பாற்றட்டும் என்றார்.

### மாகாண சபைகளை மையப்...

மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கை மையப்படுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் 13 காணப்படுகின்றன. இதில் கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸைத் தவிர ஏனைய கட்சிகள் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளன.

அந்த அடிப்படையில் தற்போதுமாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமையால் நாம் மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாகமுறைமையொன்றை உருவாக்குவதற்குரிய பரிந்துரையொன்றை முன்னெடுத்திருந்தோம்.

இறுதியாக நடைபெற்ற சந்திப்பின்போது அந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய போது எமது கோரிக்கைகளை சாதகமாக பரிசீலிப்பதாக அவர் கூறியிருந்தார்.

அத்துடன், ஜனாதிபதியுடனான இறுதிச் சந்திப்பின்போது அவர் (ஜனாதிபதி) புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படமாட்டாது என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார். அவரிடத்தில் உள்ள அதிகாரங்களுக்கு அமைவாக மாகாண சபைபனை இயங்கச் செய்வதற்காகக் கூறியிருந்தார். அதனைத் தான் தற்போது தமிழரசுக்கட்சியுடனான சந்திப்பின் போதும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார். ஆகவே அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

எம்மைப்பொறுத்தவரையில், நாம் 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள குறைப்பாடுகளை ஓரளவு நிவர்த்திசெய்யும் வகையிலான வரைவொன்றை தயாரித்து ஜனாதிபதியிடத்தில் கையளித்துள்ளோம். அதனை அவர் சாதகமாக பரிசீலிக்கின்றார். எம்முடனும் பேச்சுக்களை முன்னெடுக்கின்றார். அவ்வாறான நிலையில் தான் அவர் இந்தியாவுக்குச் செல்கின்றார். இந்தியா நீண்டகாலமாகவே 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

அதனடிப்படையில் எமது பரிந்துரைகள் அடங்கிய விடயத்தினை மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் வரையில் தற்காலிகமாக முன்னெடுக்கப்போவதாக ஜனாதிபதி ரணில் தனது விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடத்தில் தெரிவிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. குறித்த கோரிக்கையை முன்வைப்பதற்கு முன்னதாக நாம் தமிழரசுக்கட்சி உட்பட ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ உள்ளிட்ட கட்சிகளுடன் கலந்துரையாடல்களைச் செய்தோம்.

ஏனென்றால் இந்தக்கட்சிகள் அனைத்துமே 13ஆவது திருத்தச்சட்டத்தினைக் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளன. இதற்காக பிரதமர் மோடிக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளன. எனினும், இந்தக் கட்சிகள் எமது ஆவணத்தில் கையொப்பமிடவில்லை. அதற்கான காரணம் எமக்குத் தெரியாது. எம்மைப்பொறுத்தவரையில், எதிர் வரும் காலத்தில் தமிழரசுகட்சியும் எமது விடயத்தில் பங்கெடுக்கும் நிலைமை ஏற்படும்.

அவர்களால் அதனை தவிர்த்துச் செல்ல முடியாது. ஏனைய தரப்புக்களும் அதில் கலந்து கொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

### கௌதாரிமுனை காற்றாலை...

காற்றாலை திட்டம் தொடர்பில் இறுதி தீர்மானம் மேற்கொள்வதற்கான விசேட கூட்டம் நேற்று (13.06.2023) கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும்,அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த விசேட கூட்டத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கொண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,"கௌதாரிமுனை காற்றாலை அமைப்பதன் மூலம் மக்களுக்கு முழுமையான நன்மைகள் கிடைக்க வேண்டும்.

அதற்கமைய முதலீட்டாளர்களுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கைகள் முன்வைக்கப்படாமல் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அனுமதி வழங்குவது சரியாகாது.

மாறாக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அனுமதி வழங்கினால் அது அவரது தன்னிச்சையான முடிவாக மட்டுமே அமையும்.இது கூட்டத்தின் முடிவாகாது." என தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன்,சுமந்திரன், அங்கஜன் ஆகியோர் உட்பட துறைசார் திணைக்கள அதிகாரிகள், மாவட்டச்செயலக பதவி நிலை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

### தமிழ்மக்களின் 250 ஏக்கர்...

காணி ஒதுக்கப்பட்டு வாழ்வாதாரத்திற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் வழங்குவதாக கூறி குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால் தற்போது வரை அந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை.

ஆனால் ஒதுக்கப்பட்ட காணிகளில் 75 வீதமான காணிகள் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பெரும்பாண்மையின சிங்கள மக்கள் அபகரித்திருக்கின்றார்கள்.

இதேவேளை, எமது மதுராக நகரைச் சேர்ந்த பொதுமக்கள் தெற்கு சிங்கள பிரிவிற்குள் சென்று குடியேறுவதற்காக சிறுதுண்டு காணியினைக் கேட்டபோது, அதற்கு அந்தப் பகுதியில் உள்ள பௌத்த மதகுரு சம்மதித்தால் தான் இவர்கள் தமது பிரிவிற்குள் வர முடியும் என்று மாவட்ட செயலக மட்டத்தில் அன்று எனக்கு பதில் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது 250 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை தெற்கில் இருக்கும் மக்கள் அபகரித்திருக்கின்றார்கள். எனவே வீரபுரம் மக்களுக்கு அந்தக் காணிகள் வழங்கப்பட வேண்டும்" - என்றார்.

### தமிழ் தேசியத்துக்கும் த.தே.ம...

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் காண்டீபனின் அந்தக் கூற்று தொடர்பாக, முன்னாள் போராளியும், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளருமான இ.கதிர் அவர்களிடம் வினவிய போது, "தமிழ் தேசியத்துக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது" என்று அவர் தெரிவித்திருந்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி பற்றியும், 2009ஆம் ஆண்டுக்கு பின்னரான அவர்களது செயற்பாடுகள் பற்றியும் மிகவும் பரபரப்பான அவரது கருத்துக்களையும் தெரிவித்திருந்தார்.

# வடக்கு கிழக்கில் காணி விடுவிப்பு

## பொன்சேகா கடும் எதிர்ப்பு

வடக்கு கிழக்கில் படையினர் கையகப்படுத்தி வைத்துள்ள பொதுமக்களின் காணிகளை அரசியல் தேவை கருதி விடுவிக்கப்படுவதை தாம் எதிர்ப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பூகொட மண்டாவல, ரணவிரு கிராமத்தில் இடம்பெற்ற போர்வீரர் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

இன்று நாட்டை ஆட்சி செய்பவர்கள் மட்டுமன்றி பலர் போர் வீரர்களை மறந்து விடுகின்றனர். இப்போது சிலருக்கு போர் நடந்தது என்று கூட தெரியாது. மொத்தத்தில் தற்போதைய அரசாங்கம் உட்பட எந்த அரசாங்கமும் போர்வீரர்களை கண்டுகொள்ளவில்லை.

வடக்கு கிழக்கில் இராணுவத்தின் தேவைக்காக கையகப்படுத்தப்பட்ட சில காணிகள் உள்ளன. இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட சில நிலங்களைத் திருப்பித் தரவும் வாய்ப்புள்ளது. ஆனால், அரசியல் நலன் கருதி அந்த நிலங்களை திருப்பி கொடுப்பதை ஏற்க முடியாது.

வடக்கு, கிழக்கில் வாக்குகளுக்காக பேராசை கொண்ட சக்திகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மற்றும் தவறான இடத்தில் வைக்கும் போக்கு தற்போது காணப்படுகிறது. என்ன ஒரு கோழைத்தனமான செயல். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்கள்.

தற்போதைய ஆட்சியே கோழைத்தனமானது. அருவருப்பானது. பலவீனமாக உள்ளது. அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய அறிவார்ந்த தலைவர் இந்த நாட்டிற்கு தேவை. அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்று பலர் கேட்கிறார்கள், கேட்பது எளிது ஆனால் பதில் சொல்வது கடினம்.

சரியான தலைமையை தெரிவு செய்வதற்கு நாட்டு மக்கள் தியாகங்களைச் செய்தால் அதற்கான முன்மொழிவுகளை பரிசீலிக்க வாய்ப்பு உள்ளது. இருந்தாலும், வீட்டில் கண்ணாடி முன் பார்க்கும்போது, எதிர்காலத்தில் நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரைக் காண்கிறேன்.

ரணில் விக்ரமசிங்கவிற்கு சல்யூட் அடிக்க முடியும் ஏனென்றால் தற்போதைய அதிபர் ராஜபக்சவை போல ஊழல்வாதி அல்ல, ஆனால் வரும் அதிபர் தேர்தலில் நான் அவருக்கு எந்த வகையிலும் ஆதரவளிக்க மாட்டேன், அவர் மேதை அல்ல, பலவீனமானவர்.

தேசியம் பத்திரிகையில்
உங்கள் விளம்பரங்களை
பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
021 222 7557 / +94 76 567 3339

## கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துரைத்த ஊடகவியலாளர்கள் :

# இணைந்து பயணிக்க ஊடகவியலாளர்களை அழைத்த ஆளுநர் !





முஸ்லிம்கள் அதிகமாக வாழும் கிழக்கு மாகாணத்தில் மாகாண அமைச்சுக்கள் எதிலும் ஒரு முஸ்லிம் அமைச்சின் செயலாளர்கள் கூட நியமிக்கப்படாமையும், தேசிய ரீதியாகவும் அமைச்சுக்களின் செயலாளர் பதவியில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையும் மக்கள் மத்தியில் கவலையளிப்பதாகவும் சிரேஷ்ட, விசேட தர நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாண சபையில் இருந்தும் அமைச்சின் செயலாளர்கள் உட்பட பொறுப்பு வாய்ந்த பதவிகளில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாக கொண்ட கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உயர் அரச அதிகாரிகளுக்கு தமிழ் மொழியறிவு அறவே இல்லாமையால் மக்கள் சேவைபெறுவதில் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் விளக்கினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று திங்கட்கிழமை மாலை அம்பாறை ஆளுநர் விடுதியில் இடம்பெற்றது. இதன் போதே இந்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. மேலும் கருத்து தெரிவித்த அவர், கிழக்கு மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைகள், மீனவ துறைமுகமின்மையால் அம்பாறை மீனவர்களின் படகுகளை தரித்து நிறுத்துவதில் மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், காணிப்பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து கருத்துக்களை வெளியிட்டார்.

சுதந்திர ஊடகவியலாளர்கள் கலாச்சார அமைப்பின் தலைவர் ஊடகவியலாளர் ஐ.எச்.ஏ. வஹாப் வசதிகுறைந்த, வீடற்ற ஊடகவியலாளர்களுக்கு நட்புறவு நாடுகளின் உதவியைக் கொண்டு வீடுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும், மட்டக்களப்பில் நிறுத்தப்பட்டுள்ள புகையிரத பயணத்தை பொத்துவில்-ஹம்பாந்தோட்டை வரை நீடித்து மக்களுக்கு இலகுவான புகையிரத பயணத்தை மேற்கொள்ள உங்கள் சேவைக்காலத்தில் துரித நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரை கேட்டுக்கொண்டார். மேலும் கிழக்கின் கடல்வளத்தை பயன்படுத்தி ரின்மீன் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது தொடர்பிலும், கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தை முன்னெடுக்க வேலைத்திட்டமொன்றை செய்யுமாறும் ஆளுநரை வலியுறுத்தினார்.

இங்கு கருத்து தெரிவித்த நாம் ஊடகர் பேரவை தலைவர் ஊடகவியலாளர் யூ.எல். மப்ரூக் உலகின் தரமிக்க தேயிலையை இலங்கையர்களும் பருகும் வாய்ப்பை கிழக்கு ஆளுநர் உருவாக்கித்தர வேண்டும் என்றும், கிழக்கின் சுற்றுலாத்துறை பற்றிய விளக்கங்களை வழங்கிய அவர் சுற்றுலாத்தளங்களில் பிரசித்தி பெற்ற இடங்களை கொண்டுள்ள கிழக்கில் உயர்ரக தேயிலை விற்பனை நிலையங்களை உருவாக்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும் ஊடகவியலாளர்கள் தமது பணியை சிறப்பாக செய்ய அவர்களுக்கு ஊடக உபகரணங்களை பெற உள்ள சிக்கல்களை நீக்கி அவற்றை பெற்றுக்கொடுக்க ஆளுநர் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நுஜா ஊடக அமைப்பின் தலைவர் எஸ்.எம். அரூஸ் கிழக்கின் ஆளுநர்களில் ஊடகவியலாளர்களை முதன்முதலாக அழைத்து பேசிய புதிய ஆளுநருக்கு நன்றிகளை தெரிவித்ததுடன் தொடர்ந்தும் ஊடகவியலாளர்களுடன் நட்புறவுடன் கூடிய உறவை பேண மக்களின் குறைநிறைகளை அவசரமாக முடிந்தளவில் நிவர்த்திக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

கிழக்கிலுள்ள வளங்களை பயன்படுத்தி கிழக்கை முன்மாதிரியான மாகாணமாக முன்னேற்ற தான் அர்ப்பணிப்புடன் சேவையாற்றவுள்ளதாகவும், சுத்தமான கடற்கரை வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுவருவதாகவும், இன நல்லிணக்க வேலைத்திட்டங்களை அது சார்ந்தவர்களிடம் தான் கையளித்து விட்டு கிழக்கையும், நாட்டையும் முன்னேற்ற தயாராக உள்ளதாகவும், அந்த பயணத்தில் ஊடகவியலாளர்களின் பங்கு அளப்பரியது என்றவகையில் தன்னுடன் இணைந்து ஊடகவியலாளர்கள் பயணிக்க வேண்டும் என்றும், நாட்டின் கடன்சுமை அதிகரித்துள்ள நிலையில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பது தொடர்பில் தான் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஆளுநர் இந்த சிநேகபூர்வ சந்திப்பின் போது ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

# நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் நியாயம்

## நிலைநாட்டப்பட வேண்டும் : மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் ஹரீஸ் போர்க்கொடி



சவுதி அரேபிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச நுரைச்சோலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தை தேவையுடைய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் உள்ள இழுபறியில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்று தேசிய இன விகிதாசாரப்படி அந்த வீட்டுத் திட்டத்தை கையளிக்க வேண்டும் என எழுத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த கோரிக்கையை ஏற்க முடியாது என நேற்றைய அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் வாத பிரதிவாதங்கள் எழுந்தது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம். ஏ. டக்ளஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான டவலியு.டி. வீரசிங்க ஆகியோரின் இணைத்தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள், அரச உயரதிகாரிகளின் பங்குபற்றலுடன் அம்பாறை மாவட்ட செயலகத்தில் (12) நடைபெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் நுரைச்சோலை பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தை நாட்டின் தேசிய இன விகிதாசாரப்படி வழங்க முன்வர வேண்டும் என்றும் அதுவே உச்சநீதிமன்ற தீர்ப்பாக உள்ளதாகவும் அந்த கூட்டத்தில் எழுத்து மூல கோரிக்கை முன்வைக்கப்பட்டு அந்த கோரிக்கைக்கு ஆதரவாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அந்த கூற்றை மறுதலித்து இந்த தீர்மானம் மனசாட்சிக்கு முரணானதென்றும் அந்த வீட்டுத்திட்டத்தை நாட்டின் தேசிய இன விகிதாசாரப்படி வழங்க முடியாதென்றும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழும் மக்களின் இன விகிதாசாரப்படியே வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார். இந்த வீட்டுத்திட்டங்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரசாங்கம் வழங்கிய உதவி. இந்த வீட்டுத்திட்டத்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் உள்ள இழுபறியால் சவூதி- இலங்கை நட்புறவுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த வீட்டுத்திட்ட விடயம் தொடர்பில் சவூதி மன்னர் அதிருப்தியில் உள்ளதாக இலங்கைக்கான சவூதி தூதுவர் எங்களிடம் பலமுறை கூறியுள்ளார். இந்த வீட்டுத்திட்டங்களை மனிதாபிமானமே இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காமல் எங்கோ இருக்கும் சம்பந்தமே இல்லாத மக்களுக்கு வீடுகளை கையளிக்க முனைவது ஏற்றுக்கொள்ள முடியென்றும் வாதிட்டார்.

இது உச்சநீதிமன்றத்துடன் தொடர்புபட்ட விடயமாக உள்ளதால் இந்த விடயத்தில் உள்ள நியாயங்களை எடுத்துரைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டமா அதிபரை சந்தித்து பேச வேண்டும். அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநரையும் அவர் இவ்வேளையில் கேட்டுக் கொண்டார்.

இது விடயமாக சட்டமா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர்மட்டங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து பேச தான் துரிதகதியில் ஏற்பாடுகளை செய்வதாக கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது உறுதியளித்தார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் 4000க்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கத்தக்கதாக கிழக்குக்கு வெளியே ஆசிரியர்களை நியமிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும், கிழக்கில் ஆசிரிய ஆளணி வெற்றிடம் இருக்கத்தக்கதாக மாகாண கல்வி அமைச்சு அனுப்பியுள்ள கிழக்கு மாகாண ஆளணி தொடர்பிலான அறிக்கைகளை சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தனது கண்டனங்களை பதிவு செய்ததுடன் ஆசிரிய வெற்றிட்டங்களை நிரப்பி கிழக்கின் கல்வி மேம்பாட்டை உறுதிப்படுத்த கல்வியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கில் நியமனம் செய்ய தேவையான நடவடிக்கைகளை உரியவர்களிடம் பேசி எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஷை தவிர அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கடற்றொழிலாளர்களை காப்பதற்கு இந்திய பிரதமர் மோடி ஆவண செய்ய வேண்டும் : கடற்றொழில் சங்க பிரதிநிதிகள் மகஜர் கையளிப்பு !



வடக்கு கடற்றொழிலாளர்களை காப்பதற்கு இந்திய பிரதமர் மோடி ஆவண செய்ய வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதுவர் ஊடாக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் சங்க பிரதிநிதிகள் மகஜரொன்றை கையளித்தனர்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழில் உள்ள இந்திய துணை தூதுவரை சந்தித்து நேற்று (13) காலை கலந்துரையாடினர்.

இதன் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளதாக கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதி அ.அன்னராசா தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் 15ம் திகதி இந்தியாவில் மீனவர்களுடைய மீன்பிடி தடைக்காலம் நிறைவடைகிற நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, தீவக கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பான நடவடிக்கைகள் வெளிப்படையாக இடம்பெற்று வருகின்றது. இதனால் கடற்றொழிலாளர்களும் மீன் சாப்பிடும் மக்களும் பாதிக்கப்படுவர்.

டொலர் வருகிறது ஏற்றுமதி இடம்பெறுகிறது என்பதற்காக அரசாங்கம் சட்ட விரோதமான தொழிலை கனகச்சிதமாக அனுமதிக்கிறது.

கடற்றொழில் இருந்து வடக்கு கடற்றொழிலாளர்களை அந்நியப்படுத்தும் முயற்சி தற்போது இடம்பெற்று வருகின்றது. சீன கடலட்டைப் பண்ணைகளால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சட்டவிரோதமான தொழில் மற்றும் சீன கடலட்டைப் பண்ணை விவகாரங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஆறுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களும் மூன்று கடற்றொழிலாளர் சமாசங்களும் இணைந்து குறித்த மகஜரை இந்திய துணைத்தூதர் ஊடாக இந்தியப் பிரதமருக்கு வழங்கினர்.

# மருதங்கேணி விவகாரம்...! த.தே.ம.முன்னணியினருக்கு அழைப்பாணை..!




யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் மூவருக்கு கிளிநொச்சி பொலிசாரினால் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளீர் அணித் தலைவி வாசுகி சுதாகரன், மகளீர் அணி செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோரை விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸ் அழைப்பாணை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கௌதாரிமுனை காற்றாலை திட்டம்..! கால இழுத்தடிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா..!



கௌதாரிமுனை காற்றாலை திட்டத்தின் ஊடாக எமது மக்களுக்கும் நாட்டிற்கும் எவ்வாறான நன்மைகளை கூடியளவு விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதிலேயே தான் ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

குறகிய சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்படும் கால இழுத்தடிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலங்களிலும், நேற்றைய சந்திப்பிலும் மக்கள் பிரதிநிதிகளினாலும் அதிகாரிகளினாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் - ஆலோசனைகள் மற்றும் வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை தெளிவான முறையில் அடையாளப்படுத்தி, அவை நடைமுறைப்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதன பின்னர், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கௌதாரிமுனை காற்றாலை திட்டத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சிறுபான்மைச் சமூகங்களின் சவால்களைத் தீர்ப்பதற்கு பொதுவான வரைபு! வலியுறுத்தும் அமைச்சர்!



முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்களை தீர்த்துவைக்கும் பொதுவான வரைபைத் தயாரிக்கும் தருணம் வந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள அவர், இனியும் தனித்தனியாகச் செயற்பட்டு சமூக உரிமைகளை வெல்ல முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு ஜனாதிபதி முனைப்புடன் செயற்படுவதை தாம் அறிவதாக நஸீர் அஹமட்டின் ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இழக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீளப்பெறவும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகள் குறித்தும் பொதுவான வரைபை தயாரிக்க வேண்டியுள்ளதுடன் வடக்கு, கிழக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் பறிபோன முஸ்லிம்களின் பூர்வீக நிலங்களை மீளப்பெற வேண்டியுள்ளதாகவும் அமைச்சரின் அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 வீத முஸ்லிம்கள் வாழ்கின்ற நிலையில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேச செயலகங்களில் 1.3 வீத காணிகளே வழங்கப்பட்டுள்ளதாகவும் அம்பாறை, திருகோணமலை உள்ளிட்ட வடக்கின் ஏனைய பகுதிகளிலும் இதே நிலைமை காணப்படுவதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய அறிக்கையில் சந்தேகங்கள், பாரிய ஆபத்துகள் காணப்படுவதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்கள் தொடர்பில் சமூக பிரதிநிதிகளிடம் ஒருமித்த கருத்து நிலவுவது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருத்தொற்றுமையுடனும் போதிய ஆவணங்களுடனும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக சகல முஸ்லிம் தலைமைகளும் எம்பிக்களும் தங்களது அரசியல் பேதங்களைப் புறந்தள்ளி ஒன்றுபட அழைப்பதாக அமைச்சரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒரே தாய்மொழியினராகிய தமிழரும் முஸ்லிம்களும் தொடர்ந்தும் பிணக்குகளுக்குள் சிக்கியிருப்பது சிறுபான்மை சமூகங்களை ஈடேற்றாது என்பதையே வரலாறு உணர்த்தியிருப்பதாக அமைச்சர் நஸீர் அஹமட் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.






# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அ.கிருபாகரன் -அதிபர்-

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

## வெளிவரும்

தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் THESIYAM

NEWSPAPER SIZES, RATE PER EDITION

WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com

CREATIVE DESIGNER
every design has a story

Logos | Flyers | Banners | Name Boards | Brochures | Catalogue | Magazines | News Papers | Product Packaging | Social Media Ads | Badges | Menu | Posters | Vouchers

+94 77 3828 594

ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS

BIG SALE! BIG SAVINGS

# மங்களா காட்சியறை

Mangala

யாழின் தளபாட உற்பத்தியாளர்



Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.

No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

TEL : 021 222 8367 | +94 777 286 069




இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.